**செய்தி வெளியீடு எண் : 1230** **நாள் : 22.07.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

தென்காசி மாவட்டம், தென்காசி வட்டம், கடனா பாசனம் – அரசபத்து, வடகுறுவபத்துகால், ஆழ்வார் குறிச்சி தென்கால், ஆம்பூர் பெருங்கால், மஞ்சம்புளிகால், காக்கநல்லூர்கால், காங்கேயன்கால் ஆகியவற்றின் நேரடி பாசனத்திற்கு கடனா அணையிலிருந்து 2022–ஆம் ஆண்டு 1432–ம் பசலி கார் சாகுபடிக்கு 25.07.2022 முதல் 11.11.2022 வரை 110 நாட்களுக்கு, நாள் ஒன்றுக்கு வினாடிக்கு 125 கன அடி வீதம், 664.60 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் தென்காசி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள 3987.57 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
**நீர்வளத் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in